செ.வெ.எண் 11 நாள் 4-1-08

# செய்தி குறிப்பு

## <u>மஞ்சள் காமாலை தடுப்பூசித் திட்டத்தை தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்துதல்</u>

தடுப்பூசி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், போலியோ, காசநோய், தட்டம்மை மற்றும் ரணஜன்னி ஆகிய நோய்களை தடுக்க முறையான தவணைகளில் தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. இதன் பயனாக தமிழ்நாட்டில் இந்த நோய்கள் முற்றிலுமாக குறைந்துவிட்டன. தடுப்பு மருந்து திட்டத்தில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்வதால் மத்திய அரசு மஞ்சள் காமாலை தடுப்பூசியை நடைமுறைப்படுத்த தமிழ்நாட்டை தேர்வு செய்துள்ளது. ஆகவே மஞ்சள் காமாலை தடுப்பூசி திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி தமிழ்நாட்டை தொடர்ந்து முன்னிலை பெறச்செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மஞ்சள் காமாலை–பி (ஹெறப்படைட்டிஸ்–பி) பற்றிய சில தகவல்கள்:

**நோயின் தன்மை:–** ஹெறப்படைட்டிஸ்–பி வைரஸ் மூலம் ஏற்படக்கூடிய மஞ்சள் காமாலை கல்லீரலைத் தாக்கி பின் மரணத்தை உண்டாக்கக்கூடிய ஆபத்தான நோயாகும். கல்லீரல் புற்று நோய்களில் 80 சதவீதம் ஹெறப்படைட்டிஸ்– பி வைரஸால் ஏற்படுகிறது.

இந்தியாவில் ஏறக்குறைய 4 கோடியே ஐம்பது லட்சம் மக்கள் இந்த நோய்த்தொற்று உடையவர்களாகவும் அவர்களில் ஒரு கோடிக்கு மேற்பட்டவர்கள் நோய் பாதிப்புக்கும் ஆளாகிறார்கள். தமிழ் நாட்டில் ஏறக் குறைய 6 லட்சம் பேர்கள் இந் நோய்பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

**நோயின் அறிகுறிகள்: –** பசியின்மை, சோர்வு, வாந்தி, வயிற்றுவலி, தோலில் தடிப்புகள் (தோல், கண், சிறுநீர் மஞ்சள் நிறத்துடன் காணப்படுதல்) மற்றும் மூட்டு வலி ஆகியன இந்நோயின் அறிகுறிகள் ஆகும்.

**நோய் பரவும் முறை: –** ஹெறப்படைட்டிஸ்–பி வைரஸ் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு இரத்தம், உமிழ்நீர், மற்றும் பிறப்பு உறுப்புகளிலிருந்து வெளிவரும் திரவங்கள் மூலம் பரவுகிறது.

**நோய் தடுப்பு:–** இந்த நோயிடருந்து பாதுகாப்பு பெற வசதியுள்ள பெற்றோர்கள் தனியார் மருத்துவர்கள் மூலம் தங்கள் குழந்தைகளுக்கு மஞ்சள் காமாலை–பி தடுப்பூசி போட்டுக்கொள்கின்றனர். விலை கூடுதலான இந்த தடுப்பூசியை எல்லா குழந்தைகளுக்கும் கிடைக்கச்செய்ய வேண்டும். என்ற உயரிய நோக்கத்துடன் தமிழக அரசு வரும் ஜனவரி 6 ஆம் தேதி முதல் இத்திட்டத்தை தமிழகம் முழுவதும் ரூ 7.20 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

**மஞ்சள் காமாலை–பி** தடுப்பூசிக்கான கால அட்டவணை:

குழந்தை பிறந்தவுடன் (அ) 15 நாட்களுக்குள் முதல் தவணையும், 6வது வாரம் 2ஆம் தவணையும், 14 வது வாரம் 3 ஆம் தவணையும் கொடுக்க வேண்டும்.

**மஞ்சள் காமாலை–பி** தடுப்பூசி எங்கு வழங்கப்படுகிறது:

மஞ்சள் காமாலை–பி தடுப்பூசி அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் போடப்படும் ஆண்டொன்றுக்கு சுமார் 12 லட்சம் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகள் மஞ்சள் காமாலை–பி தடுப்பூசியினால் பயனடைவார்கள்.

### ஊசிக்குழல்கள்:

ஒரு முறை மட்டுமே உபயோகிக்கத் தக்க ஊசிக் குழல்கள் மஞ்சள் காமாலை -பி தடுப்பூசி போட பயன்படுத்தப்படுகிறது. எல்லா குழந்தைகளுக்கும் பாதுகாப்பான ஊசி போடுவது இதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

அனைத்து பெற்றோர்களும் ஒரு வயதிற்குட்பட்ட தங்கள் குழந்தைகளுக்கு தவறாமல் மூன்று தவணைகள் மஞ்சள் காமாலை–பி தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியால் இத்திட்டம் தமிழகத்திற்கு கிடைத்துள்ளது.** மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஜனவரி 6ஆம் நாள் இத்திட்டத்தை **தொடக்கி வைக்கிறார்.**